1973 நவம்பர் 29]

ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வோருக்குப் பயிற்சி.

*** 483. வினு—திரு. அ. தேவேந்திரன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒலிம்பிக் போட்டியில் தமிழ் நாட்டிலிருந்து யாராவது கலந்து கொண்டார்களா?

(இ) இல்லையெனில், இனிமேலாவது தனிப்பயிற்சி கொடுத்து அனுப்ப அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, ஒலிம்பிக் போட்டியில் குறிப்பாக ஹாக்கி, கால் பந்து விளையாட்டுப் போட்டியில்—கலந்துகொள்வதற்கான தேர்வுகளில் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் புறக்கணிக்கப்படுகிறுர்கள். பாரபட்சம் காட்டப் படுகிறது என்பது உண்மையா? அதற்காக அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒலிம்பிக் போட்டிப் பந்தயங்கள் அகில இந்திய அடிப்படையில் நடைபெறுகின்றன. எல்லா மாநிலங்களிலிருந்தும் தகுந்த விளையாட்டு வீரர்கள் தெரிந்தெடுத்து அனுப்பப்படுகிறுர்கள். முனிச்சில் நடைபெற்ற இருபதாவது ஒலிம்பிக் விளையாட்டுப் பந்தயத்தில் தமிழ் நாட்டிலிருந்து திருவாளர்கள் பி. கிருஷ்ணமூர்த்தி, வி. பி. கோவிந்து, மற்றும் வி. ஜே. பிலிப் ஆகிய விளையாட்டு வீரர்கள் பங்கேற்றுர்கள். மாநில விளையாட்டு மன்றம் தமிழ்நாடு ஹாக்கி குழுவினருக்கு விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான வசதி செய்துகொடுப்பதற்காக எண்ணுயிரம் ரூபாய் மானியமாக அளித்தது.

திரு. சு. துரைசாமி: தனிப் பயிற்சி கொடுக்கப்படவில்லை என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பொதுவாக ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் இந்திய நாடு முழுவதிலுமிருந்தும் வந்து பங்கெடுத்துக்கொள்வதால், அதற்கென

சிறப்புப் பயிற்சி ஆசிரியர்கள், குறிப்பாக ஹாக்கி, கால் பந்து விளையாட்டுகளுக்காவது நியமிக்கப்பட்டு, அவர்கள்மூலம் பயிற்சி கொடுக்கும் ஏற்பாட்டை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பொதுவாக பல்வேறு விளையாட்டுகளிலும் பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடுகளை தமிழ் நாடு மாநில விளையாட்டு மன்றம செய்து வருகிறது. அந்தப் பயிற்சி கொடுக்கிறவர்களுக்குத் தேவைப்படுகிற வசதிகளையும் அவர்களுக்கான ஊதியத்தையும் மற்றவற்றையும் தரும் பொறுப்பினைத் தமிழ் நாடு மாநில விளையாட்டு மன்றம் அளித்து வருகிறது. கால் பந்து விளையாட்டு, கைப்பந்து விளையாட்டு, ஹாக்கி, கிரிக்கெட் போன்றவற்றிற்கு 'கோச்சர்ஸ்' என்ற முறையில் பயிற்சியாளர்களுக்கு அளித்துவருகிறது. ஒலிம்பிக் விளையாட்டுக்கென தனிப் பயிற்சி தேவைப்படுகிற சூழ்நிலை ஏற்படுமானால் அதுபற்றி அரசு கவனிக்கும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, தேசிய அளவில் நடைபெறும் இந்த ஒலிம்பிக் விளையாட்டுப் பந்தயத்தில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கள் பெரும்பாலும் வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம், வட மாநிலத்தில் பாட்டியாலா போன்ற இடங்களில் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு பயிற்சியைத் தமிழ் நாட்டிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கும் அளிக்க நமது அரசு யோசனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னையிலிருக்கும் ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி புகழ்பெற்ற ஒன்றாக இருக்கிறது. அதிலே இந்திய மாணவர்கள் மட்டுமல்லாமல், அண்டை நாடுகளைச் சேர்ந்தவர்களும் பல பேர் வந்து பயிற்சி பெற்று வருகிறார்கள். ஆக, பயிற்சி அளிப்பதற்கு எல்லா வசதிகளும் வாய்ப்புக்களும் இருக்கின்றன. மத்திய அரசுக்கு நாம் வேண்டுகோளும் விடுத்திருக்கிறோம். வடக்கே பாட்டியாலா எப்படி தெரிந்தெடுக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறதோ அதேபோல அகில இந்திய போட்டிக்கு விளையாட்டு வீரர்களைத்

1973 நவம்பர் 29]

தெரிந்தெடுப்பதற்கு ஒய்.எம்.சி.ஏ. கல்லூரியைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும், அதற்கு மத்திய அரசு தேவையான அளவு உதவி செய்ய வேண்டுமென்ற கருத்து மத்திய அரசிடம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மத்திய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

Separate wing for Architecture

*484 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open an independent Architectural Wing in this State as recommended by the State Administrative Reforms Commission ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆட்சி சீர்திருத்தக் கழகம் செய்த சிபாரிசுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. என். டென்னிஸ்: எப்போது அவைகள் நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பரிசீலனையில் இருக்கிறது. முடிந்த உடன் நடைமுறைக்கு வரும்.

அண்ணாசாலையில் சுரங்கப்பாதை

*485. **வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, அண்ணாசாலையில் மின் வாரியத் தலைமை அலுவலகத்திற்கு அருகில் சுரங்கப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் ஆம் என்றார்கள். அப்படியானால் அந்த வேலை எப்போது எடுத்துக்கொள்ளப்படும்? எப்போது முடிவுறும்? அதற்காகும் செலவு என்ன?